# நமது தினகனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 159 | 4 Pages | 11.1.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 159 | 4 பக்கங்கள் | 11.1.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பொங்கல் பரிசு தொகுப்பு அரசாணை வெளியிட்டது தமிழக அரசு

சென்னை, ஜன.11

பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழ்நாடு அரசு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவதாக அறிவித்து இருந்தது. அதன்படி 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழு கரும்பு மற்றும் ரூ. 1000 ரொக்கம் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவது தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தால் அரசுக்கு ரூ. 2 ஆயிரத்து 436 கோடி செலவினம். அரிசி குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்பவர்கள் என 2,19,71,113 குடும்பத்தினர் பயனடைவர்.

## மதுரை துணை மேயர் வீடு, அலுவலகத்தில் தாக்குதல் இருவர் கைது



மதுரை, ஜன.11

மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் வீடு,அலுவலகங்களில்தாக்குதல்நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த துணை மேயர் நாகராஜன், மனைவி செல்வராணி ஆகியோர் வீட்டில் இருந்தபோது, மர்ம நபர்கள் இருவர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் இருசக்கர வாகனம், அலுவலக கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. இந்த சம்பவம் தொடர்பாக துணை மேயர் வீட்டு வாசலில் ரகளையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## கார்த்தி சிதம்பரத்துக்கு நோட்டீஸ் அனுப்பிய காங்கிரஸ்: காரணம் தெரியுமா?




புதுடெல்லி, ஜன.11

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதி மந்திரியுமான ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம். சிவகங்கை தொகுதி எம்.பி.யாக இருந்து வரும் இவர், காங்கிரஸ் தலைமையின் கருத்துக்கு எதிர் கருத்துக்களையும் அவ்வப்போது தெரிவித்து வருகிறார்.

இதற்கிடையே, சமீபத்தில் தனியார் சேனலுக்கு பேட்டியளித்த கார்த்தி, பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகரான தலைவர் யாரும் நாட்டில் இல்லை என வெளி ப்படையாக கருத்து சொல்லி யிருந்தார். இது காங்கிரஸ் கட்சி வட்டாரத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பிரதமர் மோடியுடன் ராகுல் காந்தியை ஒ ப் பி ட் டு ப் பே சி ய த ற் கு விளக்கம் கேட்டு சிவகங்கை எம். பி. கார்த்திக்கிற்கு தமிழக காங்கிரஸ் கமிட்டி ஒழுங்கு நடவடிக்கைக்குழு தலைவர் குமாரசாமி நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

## தற்காலிக டிரைவர் ஓட்டி சென்ற அரசு பஸ் வெள்ள நீரில் சிக்கியது



திண்டிவனம், ஜன.11

விழுப்புரத்தில் இருந்து காஞ்சிபுரத்திற்கு அரசு பஸ் சென்று கொண்டிருந்தது. அரசு பஸ் டிரைவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் இதனை தற்காலிக டிரைவர் மணி கண்டன் பஸ்சை ஓட்டி சென்றார். இந்த பஸ் திண்டிவனம் இந்திரா காந்தி பழைய பஸ் நிலையத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக அங்குள்ள தரைப் பாலத்தை கடந்த பொழுது ஏரியில் திறக்கப்பட்ட உபரிநீர் அதிகரித்து சாலையில் ஓடியது. இதில் பஸ் பழுதாகி வெள்ளநீரில் சிக்கிக் கொண்டது.

பஸ்சில்இருந்தஒருசிலபயணிகள் கைகளை கோர்த்து சங்கிலி போன்ற அமைப்பு ஏற்படுத்தி அங்கிருந்து வெளியேறினர். மூதாட்டி ஒருவர் அந்தப் பஸ்சிற்குள் சிக்கிக்கொண்டார். அவரை மீட்கும் முயற்சியில் போலீசார் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

கிடங்கல் ஏரியில் நீர் அதிகரித்ததால் போலீசார் அப்பகுதியில் தடுப்பு ஏற்படுத்தி இருந்தனர். ஆனால் வேன் டிரைவர்கள் வாகனத்தை கழுவுவதற்காக தடுப்புகளை அகற்றியதாக கூறப்படுகிறது.

இதனை அறியாத பஸ் டிரைவர் தரைப்பாலத்தின் வழியே வந்ததாலும், நீர்வரத்து அதிகரிப்பாலும், பஸ் பழுதாகி நீரில் சிக்கிக் கொண்டது. இந்த சம்பவம் திண்டிவனம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


## போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்: ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஜன.11

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

15ம் ஊதிய ஒப்பந்த பேச்சுகளை உடனடியாக தொடங்க வேண்டும், ஓய்வூதியர்களுக்கு கடந்த 96 மாதங்களாக வழங்கப்படாத அகவிலைப் படி உயர்வை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர்.

வேலை நிறுத்தத்தால் பாதிப்பு இல்லை என்றும், மாநிலம் முழுவதும் 93.90 சதவீத பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் தமிழக அரசின் சார்பில் கூறப்பட்டாலும் கள நிலைமைவேறாக உள்ளது. நகரப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்பட்டாலும் கூட, ஊரகப்பகுதிகளில் போக்கு வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அகவி



லைப்படி உயர்வு கோரிக்கையை மட்டும் நிறைவேற்ற மாதத்திற்கு சுமார் ரூ.20 கோடி மட்டுமே கூடுதலாக செலவாகும். இந்தக் கோரிக்கையைக் கூட நிதிநிலையை காரணம் காட்டி நிறைவேற்ற மறுப்பது நியாயமல்ல. போக்குவரத்துத் தொழிலாளர்கள் அரசுக்கு எதிரிகள் அல்ல. அவர்களின் ஒற்றைக் கோரிக்கையை நிறைவேற்றி மற்ற கோரிக்கைகள் தொடர்பாக வாக்குறுதி அளித்து வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கைஎடுக்கவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## குடியரசு தினவிழாவில் கர்நாடகா அலங்கார ஊர்திகள் புறக்கணிப்பு: சித்தராமையா குற்றச்சாட்டு



பெங்களூரு, ஜன.11

தலைநகர் டெல்லியில் குடியரசு தினவிழா வரும் 26ம் தேதி கோலாகலமாக நடைபெற உள்ளது. இந்த விழாவில் பல்வேறு மாநிலங்களின் சிறப்புகளை பிரதிபலிக்கும்வகையிலானஅலங்காரஊர்திகள்இடம்பெற்றுகாண்போரைக் கவர்ந்திழுக்கும்.

இதற்காக மத்திய அரசு முன்கூட்டியே மாநிலங்கள் அனுப்பும் மாடல்களை பரிசீலனை செய்து விழாவில் இடம்பெறும் ஊர்திகளை தேர்வு செய்யும்.

இந்த ஆண்டு கர்நாடக மாநில ஊர்திகளைச் சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையை அம்மாநில அரசு அனுப்பியிருந்தது.

இந்நிலையில், இந்த ஆண்டு குடியரசு தினவிழா அணிவகுப்பில் மாநில ஊர்திகளை சேர்க்க வேண்டும் என கர்நாடகா அனுப்பிய அனைத்துப் பரிந்துரைகளையும் மத்திய அரசு நிராகரித்துள்ளது. கடந்த ஆண்டும் இதேபோல் மத்திய அரசு கர்நாடகாவை அவமானப்படுத்தியது என கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா குற்றம் சாட்டியுள்ளார்.

## புரியாத மருந்து சீட்டு கையெழுத்து: டாக்டர்களுக்கு குட்டு வைத்த ஒடிசா ஐகோர்ட்



புவனேஷ்வர், ஜன.11

ஒடிசா மாநில ஐகோர்ட்டில் ஒருவர் தனது மகன் பாம்பு கடித்து இறந்துவிட்டதால் கருணைத் தொகை கேட்டு மனுதாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணையின்போது அரசு சார்பில் இணைக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை தெளிவாக, புரிந்துகொள்ளும்படியாக இல்லை. இதனால் வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.கே.பனிகிரஹி, அந்த டாக்டரை ஆஜராக உத்தரவிட்டார். அதன்படி டாக்டர் காணொலி காட்சியில் ஆஜராகி விளக்கம் அளித்தார். இதையடுத்து பாம்புக்கடி வழக்கில் நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அதில் அவர் கூறியதாவது:

அரசு மற்றும் தனியார் டாக்டர்கள் மருந்து சீட்டை கையால் எழுதுவதால் நோயாளிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது.

உடல் பிரேத பரிசோதனை அறிக்கை கூட கையால் எழுதுவதால் நீதிமன்றத்தில் சரியான முறையில் தாக்கல் செய்ய முடியவில்லை.

அரசு மற்றும் தனியார் டாக்டர்கள் மருந்து சீட்டு, மருத்துவ அறிக்கை ஆகியவற்றைகையால்எழுதுவதைதவிர்த்து,முடிந்தால்பெரியஎழுத்துகளில் அல்லது கம்ப்யூட்டரில் டைப் செய்து தரவேண்டும் என ஒடிசா அரசு சுற்றறிக்கை வெளியிட வேண்டும் என உத்தரவிட்டார்.

## ராமர் கோவில் கும்பாபிஷேகம்: ஜனவரி 22ல் உ.பி.யில் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை



லக்னோ, ஜன.11

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் வரும் 22ம் தேதி நடைபெறுகிறது. அயோத்தியில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் முதல் கட்ட பணிக்கு ரூ.1,450 கோடி செலவானது.

ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் பயணிகளுக்கு சேவை செய்யும் வகையில் விமான நிலைய முனைய கட்டிடம் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. முனையத்தின் முகப்பு கட்டிடம் அயோத்தி ராமர் கோவில் கட்டிடக் கலையை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அயோத்தி விமான நிலையத்திற்கு 'மகரிஷி வால்மீகி சர்வதேச விமான நிலையம், அயோத்தியாதாம்' என பெயரிடும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறும் 22ம் தேதி அன்று அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை விடப்பட வேண்டும். 22ம் தேதி அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட வேண்டும் என முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

# காணும் பொங்கல் பாதுகாப்புக்கு 16 ஆயிரம் போலீசார் டிரோன்கள் மூலம் கண்காணிப்பு

சென்னை, ஜன.11

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில் அதனை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருகிறார்கள். வருகிற 15ந் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் நிலையில் மறுநாள் 16ந் தேதி மாட்டுப் பொங்கலும் அதற்கு மறுநாள் (17ந் தேதி) காணும் பொங்கலும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

காணும் பொங்கல் அன்று தமிழகம் முழுவதும் உள்ள சுற்றுலா தலங்களில் பொது மக்கள் கூட்டம் கூட்டமாக கூடி உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் பொழுதை போக்குவார்கள். இதனால் கடற்கரை பகுதிகள், பூங்காக்கள் உள்ளிட்ட சுற்றுலா தலங்களில் கூட்டம் அலைமோதும்.

இந்த ஆண்டும் காணும் பொங்கலை வழக்கமான உற்சாகத்தோடு கொண்டாட மக்கள் மிகுந்த ஆர்வமுடன் உள்ளனர். மெரினாவில்

சென்னையில் மெரினா கடற்கரையில் ஒவ்வொரு ஆண்டும் காணும் பொங்கல் அன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள்.

இதன் படி வருகிற 17ந்



தேதி அன்று மெரினாவில் கூடும் மக்கள் கூட்டத்தை கருத்தில் கொண்டு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீசார் செய்து வருகிறார்கள். போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின் பேரில் கூடுதல் கமிஷனர் பிரேமானந்த் சின்கா, இணை கமிஷனர் தர்மராஜ் ஆகியோர் மேற்பார்வையில் மெரினா உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் 16 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மெரினா கடற்கரை எலியட்ஸ் கடற்கரை உள்ளிட்ட கடலோர பகுதிகள் முழுவதிலும் தற்காலிக கட்டுப்பாட்டு அறைகளை அமைத்து போலீசார் தீவிரமாக கண்காணிக்க உள்ளனர்.

காணும் பொங்கல் தினத்தில் திரளாக மக்கள் கூடுவார்கள் என்பதால் அன்றைய தினம் மெரினா உள்ளிட்ட கடற்கரைகளில் கடலில் இறங்கி குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கடற்கரையோரங்களில் தடுப்பு கட்டைகள் கட்டப்பட்டு உள்ளன. இதையும் தாண்டி மக்கள் கடலில் இறங்கி விடக்கூடாது என்பதற்காக போலீஸ் குதிரைப்படை வீரர்களை கொண்டும் கண்காணிக்கப்பட உள்ளது. மெரினாவில் கூட்ட நெரிசலின் போது குழந்தைகள் காணாமல் போனால் அவர்களை கண்டுபிடிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக மெரினாவுக்கு பெற்றோருடன் வருகை தரும் குழந்தைகளின் கைகளில் பாதுகாப்பு வளையம் ஒன்றை கட்டி விட போலீசார் முடிவு செய்துள்ளனர். அந்த வளையத்தில் போலீஸ் உதவி மைய செல்போன் எண்களும், பெற்றோர்களின் செல்போன் எண்களும் இடம் பெற்றிருக்கும். இதன் மூலமாக மாயமாகும் குழந்தைகளை உடனுக்குடன் கண்டு பிடிக்க முடியும் என்று போலீசார் தெரிவித்தனர்.

கூட்ட நெரிசலில் பிக்பாக்கெட், செயின் பறிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை பிடிக்க சாதாரண உடையிலும் போலீசார் கண்காணிக்க உள்ளனர்.

டிரோன்கள் மூலமாகவும் வானில் வட்டமடித்து கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர மெரினாவில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கோபுரங்களை அமைத்தும் போலீசார் பைனாகுலர் மூலமாக கூட்டத்தை கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அண்ணா சதுக்கம் மற்றும் மெரினா போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

# மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு முயற்சிகளை செய்து வரும் விஜய் வசந்த் எம்.பி.

கன்னியாகுமரி, ஜன.11

கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி மலைகளால் சூழப்பட்டு மலைவாழ் கிராமங்களில் ஏராளமான மக்கள் வசித்து வருகிறார்கள். மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு நல திட்டங்களை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் செய்து வருகிறார்.



இந்நிலையில் கடந்த தினங்களாக பேச்சிப்பாறை ஊராட்சிக்கு உட்பட்ட மலைவாழ் கிராமங்களான கோதையார், குற்றியார், தோட்டமலை, தச்சமலை ஆகிய கிராமங்களுக்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து அவர்கள் குறைகளை கேட்டு அறிந்தார்.

குறிப்பாக சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலைமையில் காணப்படுவதால் போக்குவரத்திற்கு மக்கள் சிரமப்படுவதாக தெரிவித்தனர். சாலைகள் மிக மோசமான நிலையில் இருப்பதாக வாகன ஓட்டிகள் புகார் தெரிவித்ததை தொடர்ந்து அவரே தனது வாகனத்தை சாலைகளில் ஓட்டி அவர்களின் இன்னல்களை தெரிந்து கொண்டார்.

சாலைகள் செப்பனிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்தார். மேலும் இங்கு இயங்கிக் கொண்டிருந்த பேருந்துகள் திடீர் என்று நிறுத்தி வைக்கப்பட்டதை மக்களிடம் இருந்து தெரிந்து கொண்டு உடனடியாக போக்குவரத்து துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்த பகுதிகளில் மீண்டும் பேருந்து போக்குவரத்தை ஆரம்பிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்த பகுதிகளில் பல வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்க முயற்சிகள் எடுத்து வருகிறார்.

சில தொழில்நுட்ப சிக்கல்கள் நிலவி வருவதால் மின்சாரம் வழங்க சிரமம் இருப்பதை மக்களுக்கு எடுத்துக் கூறி அந்த சிக்கல்களுக்கு தீர்வு காண முயற்சிகள் எடுக்கப்படும் என விளக்கினார்.

இந்த சந்திப்பின் போது வட்டார காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வினுட்ராய், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ரத்தினகுமார், கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் டைசன், பேச்சிப்பாறை ஊராட்சி கமிட்டி தலைவர் குமார் மற்றும் ஏராளமான காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் தளபதியார் பொற்கால திராவிட மாடல் ஆட்சியில் விழுப்புரம் மாவட்டம் கழக செயலாளர் தமிழக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டலில் மயிலம் தெற்கு ஒன்றியம் மயிலம் ஊராட்சியில் பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கழக உடன்பிறப்புகள் ஒன்றிய பிரதிநிதிகள். வி. காமராஜன், பொன். பாண்டியன், பொன்.அசோகன், ப.சந்தோஷ்குமார்,ந.கார்த்திகேயன், உடன்இருந்தார்கள்.அன்புடன்.சா.செல்வகுமார், ஒன்றிய கவுன்சிலர், மயிலம் ஊராட்சி மன்ற தலைவர். த. சிவக்குமார். விழுப்புரம்

# முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஜன.11

இளநிலை மருத்துவ படிப்புகள் மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளில் சேருவதற்கான தகுதித்தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது.

நாடு முழுவதும் பிளஸ்2 முடித்த மாணவமாணவிகள் நீட் தேர்வு எழுதி அதன் மூலம் அரசு மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மார்ச் 3ந்தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டு இருந்த முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு, ஜூலை 7ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாதேஸ்வரசாமி கோவில் விழா: பூசாரிகள் குண்டம் இறங்கினர்



தாளவாடி, ஜன.11

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே உள்ள ஒசூரில் மிகவும் பழமையான மாதேஸ்வரசுவாமி கோவில் உள்ளது. இந்த கோவில் குண்டம் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். இந்த குண்டம் விழாவில் பூசாரிகள் மட்டுமே குண்டம் இறங்குவார்கள். பொதுமக்களுக்கு அனுமதி கிடையாது.

அதே போல் இந்த ஆண்டும் குண்டம் திருவிழா நேற்று இரவு தொடங்கியது. நள்ளிரவு 1 மணியளவில் பால்குடம் எடுத்து பக்தர்கள் கோவிலுக்கு வந்தனர். பின்னர் சாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடந்தது. அதன் பின்னர் கோவில் பகுதியில் குறவர் நடனம், புலியாட்டம் நடந்தது.

அதைத்தொடர்ந்து இன்று அதிகாலை 5 மணிக்கு அங்குள்ள காட்டாற்றில் இருந்து அம்மன் அழைக்கும் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் மாதேஸ்வரசாமி எழுந்தருளினார். பின்னர் ஒசூர் பகுதியில் சுவாமி சப்பர வீதி உலா நடந்தது. அப்போது பக்தர்கள் சாமிக்கு தேங்காய் பழம் உடைத்து வழிபட்டனர்.

முக்கிய வீதி வழியாக சப்பர வீதி உலா வந்தது. பின்னர் காலை 7.30 மணியளவில் கோவிலை சென்றடைந்தது. கோவில் முன்பு 30 அடி நீளத்தில் குண்டம் தயார் செய்யபட்டு இருந்தது.

இதை தொடர்ந்து காலை 8 மணியளவில் கோவில் தலைமை பூசாரி முதலில் குண்டம் இறங்கி தீ மிதித்தார். அதை தொடர்ந்து பூசாரிகள் குண்டம் இறங்கினர்.

திருவிழாவில் தாளவாடி, தொட்டகாஜனூர், பாரதிபுரம், மெட்டல்வாடி மற்றும் கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர், சிக்கொலா, அட்டுகுளிபுரம் உள்பட பல்வேறு பகுதியில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்ன தானம் வழங்கபட்டது.

# பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.10 லட்சம்: பசுமை தீர்ப்பாய உத்தரவு செல்லும் சுப்ரீம் கோர்ட்

காஞ்சிபுரம், ஜன.11

காஞ்சிபுரம் மாவட்டம், குருவிமலை அருகே வளத்தோட்டம் பகுதியில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதையடுத்து பட்டாசு ஆலை விபத்தில் பலியான குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும் நிவாரணத்தொகை வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

இதேப்போல் காஞ்சிபுரம் அருகே பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தோருக்கு தலா ரூ.50 ஆயிரமும் நிவாரணத்தொகையை பிரதமர் நரேந்திர மோடியும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் காஞ்சிபுரம் பட்டாசு ஆலை விபத்து தொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய தேசிய தென்மண்டல பசுமை தீர்ப்பாயம், பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு 20 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 10 லட்சமும் தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும் எனவும் இந்த தொகையை பட்டாசு குடோன் உரிமையாளரிடம் இருந்து மாநில அரசு வசூலிக்கலாம், அதில் தீர்ப்பாயம் எந்த நிபந்தனையும் இல்லாமல் அனுமதி வழங்குகிறது என்றும் கடந்த ஏப்ரல் மாதம் உத்தரவிட்டு இருந்தது.

பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு 10 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட்ட தேசிய பசுமை தீர்ப்பாய உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு மேல்முறையீட்டு மனு தொடர்ந்தது. இந்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது.

அப்போது நீதிபதிகள் இத்தகைய பட்டாசு ஆலைகள் ஒழுங்காக செயல்படுகிறதா? என்பதை கண்காணிக்க வேண்டியது அரசின் வேலையாகும்.

மேலும், சமுதாய அக்கறையுள்ள அரசு என கூறும்போது, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டியதும் உங்களது வேலை தானே? என்று தெரிவித்தனர்.

தமிழக அரசு தரப்பில் கூறும்போது, இழப்பீடு வழங்குவதில் எந்த தயக்கமும், பிரச்சனையும் இல்லை. ஆனால் அதை எவ்வளவு வழங்க வேண்டும் என தேசிய பசுமை தீர்ப்பாயம் கூறுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதை நிர்ணயம் செய்யவும் முடியாது.

அவ்வாறு இழப்பீட்டை நிர்ணயம் செய்ய தொடங்கினால், இதுதொடர் பழக்கமாக மாறிவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தது. தமிழ்நாடு அரசு மனுதாக்கல் செய்ததில் எந்த முகாந்திரமும் இல்லை எனவும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. மேலும், சொத்து குவிப்பு வழக்கு தண்டனையை எதிர்த்து பொன்முடி தொடர்ந்த மேல்முறையீட்டு மனு வருகிற வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர், கலெட்கர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தேசிய வாக்காளர் தினம் 2024 தொடர்பாக வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பள்ளி மாணவ, மாணையர்களிடையே வினாடி வினா போட்டி நடைபெற்றது.

# நெல்லை, தூத்துக்குடியில் வெள்ள சேதங்களை பார்வையிட மீண்டும் மத்திய குழு வருகிறது

தூத்துக்குடி, ஜன.11

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த மாதம் 17, 18ந் தேதிகளில் வரலாறு காணாத மழை பெய்தது. இதன் காரணமாக பல்வேறு இடங்களில் சாலைகள் துண்டிக்கப்பட்டதாலும், வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததாலும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது.

இதைத்தொடர்ந்து வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு தேங்கிய தண்ணீரும் படிப்படியாக அகற்றப்பட்டு தற்போது நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

எனினும் பல்வேறு வீடுகள் இடிந்தும், சேதம் ஆகியும், வீட்டில் இருந்த பொருட்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டும் உள்ளது. இதேபோல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்து அதிக பாதிப்பு ஏற்பட்ட பகுதி மக்களுக்கு தலா ரூ.6 ஆயிரமும், மற்ற பகுதி மக்களுக்கு தலா ஆயிரம் என நிவாரண தொகை அறிவித்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களுக்கு தேவையான நிவாரண தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதைத்தொடர்ந்து மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்து வெள்ள சேத பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து சென்றார். மேலும் மத்திய குழுவினரும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்கனவே ஆய்வு செய்து வெள்ள சேதங்கள் குறித்து கணக்கெடுத்து சென்றனர்.

இந்நிலையில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ள சேதங்களை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக மத்திய குழு மீண்டும் வருகிறது. அந்த வகையில் மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை துறை நிர்வாகி மற்றும் ஆலோசகர் கீர்த்தி பிரதீப் சிங் தலைமையில் பல்வேறு துறைகளை சேர்ந்த உயர் அதிகாரிகள் பொன்னுசாமி, விஜயக்குமார், ரங்கநாத் ஆதம், ராஜேஸ் திவாரி, தங்கமணி, பாலாஜி ஆகிய7 பேர் கொண்ட குழுவினர் நாளை மறுநாள் (வியாழக்கிழமை) இந்த மாவட்டங்களில் ஆய்வு செய்ய வருகின்றனர்.

தொடர்ந்து அவர்கள் 14ந் தேதி வரை 4 நாட்கள் ஆய்வு செய்கிறார்கள். இதற்காக 11ந் தேதி மதுரை வரும் மத்திய குழுவினர் அங்கிருந்து விமானம்மூலம்தூத்துக்குடி வருகிறார்கள். அங்கு வெள்ளத்தால் சேதமான பயிர்கள், சாலைகள், வீடுகள், உள்ளிட்ட பல்வேறு இடங்களை ஆய்வு செய்கிறார்கள். மேலும் வெள்ள பாதிப்பு தொடர்பாக மாவட்ட கலெக்டர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

# தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை தொடங்கி வைத்து மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை சிறந்து விளங்குவதற்கு ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதை நோக்கி பயணம்

கரூர், ஜன.10

கரூர் மாவட்டம், தான் தோன்றிமலை அரசு கலைக் கல்லூரியில், மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக, கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியனை தொடங்கி வைத்து கற்றல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் வணக்கம் நீங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பத்தாம் வகுப்பு ,12ஆம் வகுப்பு, கல்லூரி படிப்பு முடித்த பின்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யும்போது அரசு துறைகளுக்கு ஆட்கள் தேவைப்படும்போது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பட்டியலைப் பெற்று பதிவு மூலம் அடிப்படையில் நேர்முகத் தேர்வுகள் நடத்தி தகுதியானவர்களை அரசு பணியாளர்களாக தேர்வு செய்கிறது . மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டு அரசு பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் தற்போது வேலைவாய்ப்பு துறையின் மூலம் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.. மேலும் தமிழ்நாடு அரசு தான் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், மக்களுடன் முதல்வர் என புதுப்புது திட்டங்களை அறிமுகப்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்கள் மற்றும் சமுதாயத்தில் உள்ள அனைத்து பொதுமக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது. மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை சிறந்து விளங்குவதற்கு ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதை நோக்கி பயணம் செய்ய வேண்டும் உங்களுக்குள் ஒரு கனவாக இருக்க வேண்டும் ஒரு உத்வேக தீ உள்ளத்தில் எப்பொழுதும் எரிய வேண்டும். இந்த கனவை களைப்பதற்கு பொருளாதார உள்ளிட்ட பல்வேறு தடைகள் உங்களுக்கு ஏற்படலாம் அந்த தடைகளை தகர்த்து நீங்கள் படி படியாக முன்னேற வேண்டும். நூலகங்களுக்கு சென்று குறிப்புகள் எடுத்து மாணவர்கள் ஒரு குழுவாக சேர்ந்து ஆலோசனை செய்து தேர்வுக்கு தயாராக வேண்டும். உங்களுடைய தாழ்வு மனப்பான்மையை விட்டு விட்டு ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட வேண்டும். தன்னம்பிக்கை தரக்கூடிய புத்தகங்களை படித்து நல்ல வழிகாட்டியின் பின் செல்ல வேண்டும். பல்வேறு சுய தொழில்கள் உள்ளது அதில் ஆர்வத்துடன் செயல்பட்டு பொருளாதாரத்தை ஈட்டலாம் வேளாண் உப பொருட்களை உருவாக்கலாம் வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்யலாம்.

நீங்கள் சுயதொழில் செய்வதன் மூலம் பிறருக்கு நீங்கள் வேலைவாய்ப்பை வழங்க முடியும் அதற்கான திறமையை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தாய் தந்தையர்கள் செய்யும் தொழில் உங்கள் நண்பர்கள் செய்யும் தொழிலை நீங்கள் புதிய முறையில் செய்தாலும் வாழ்க்கையில் உயரலாம். எனவே, மாணவ மாணவியர்கள் நல்ல பணிகளில் சேர்வதற்கும் சுயதொழில் செய்பவர்களாகவும் தொழில் அதிபர்களாக ஆவதற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட கலெக்டர் தங்கவேல் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம் , கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில், கல்லூரி படிப்பிற்கு பிறகு எண்ண படிக்கலாம் என்ற தலைப்பில் கோவை பாரதியார் பல்கலைகழக செல்வபிரணாம்பிகா,. சுயவேலைவாய்ப்பு குறித்து கரூர் மாவட்ட தாட்கோ மேலாளர் கு.பாலமுருகன் , மத்திய மாநில அரசுகளுக்கான போட்டித்தேர்வுகள் குறித்து இளம்தொழில் வல்லுநர், அ.வீரக்குமார் , கல்லூரி கனவுகள் என்ற தலைப்பில் தாந்தோன்றிமலை அரசுக்கலைக்கல்லூரி முதல்வர் அலெக்சாண்டர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டார்;கள். முன்னதாக தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சியினை என மாவட்ட கலெக்டர் திறந்த வைத்து பார்வையிட்டார்கள்.

பின்னர் நான் என்னவாக விரும்புகிறேன் என்ற தலைப்பில் மாணவ, மாணவியருக்கான நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் முதல் மூன்று இடங்கள் பிடித்தவர்களுக்கு நூல்களை பரிசாக வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குனர் கோவை வேலைவாய்ப்பு ஜோதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சாந்தி, மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கைக்கு காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் உத்தரவு

காஞ்சிபுரம், ஜன.10

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி தீர்வு காணப்பட்டு வருகிறது.




இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து 206 மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் 4 பயனாளிகளுக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர்களுக்கான பணி நியமன ஆணையினையும் மற்றும் இந்திய குழந்தைகள் நல கூட்டமைப்பு சார்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த கிராமப்புற பகுதியில் உள்ள பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு 11 மிதிவண்டிகளையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ்மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் 16-வது மாவட்ட மாநாடு

புதுக்கோட்டை, ஜன.10

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் புதுக்கோட்டை 16 வது மாவட்ட மாநாடு நடைபெற்றது புதிய நிர்வாகிகளாக மாவட்டத் தலைவராக மு.முத்துக்குமார்,மாவட்ட செயலாளராக ம.வீரமுத்து, மாவட்ட பொருளாளராக த.விமலா ஆகியோரும் துணைத் தலைவர்களாக க.சதாசிவம், இரா. இராமதிலகம், முனைவர் ஆர்.பிச்சைமுத்து, ஈ.பவனம்மாள், ஆ. செல்வராசு,பெ.புவியரசு. இணைச் செயலாளர்களாக சி.ஷோபா, க.வடிவேல், மு.சாமியப் பன், நூ.ஜெரினா பேகம்,வீ. சண்முகப்பிரியா, க.ரா. ஓவியா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்




தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் புதுக்கோட்டை 16 வது மாவட்ட மாநாடு பழைய பேருந்து நிலையத்தில் சமூக மாற்றத்திற்கான அறிவியல் விழிப்புணர்வு பேரணியுடன் தொடங்கியது. பேரணியை புதுக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா தொடக்கி வைத்தார். இதில் புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களில் இருந்தும் ஆர்வலர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர். வழிநெடுகிலும் அறிவியல் விழிப்புணர்வு மற்றும் சுற்றுசூழல் விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பி வந்தனர். இப்பேரணி நகர் மன்றத்தில் நிறைவடைந்தது.

பின்னர் நடைபெற்ற பொது மாநாட்டிற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயற்குழு உறுப்பினர் லெ.பிரபாகரன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் க.சதாசிவம் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயலாளர் எஸ்.டி.பாலகிருஷ்ணன் மாநாட்டை தொடக்கி வைத்து பேசினார். இதில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக் கோட்டை நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், நகர் மன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு, ரோஸ் தொண்டு இயக்குனர் ஏ.ஆதப்பன், நேரு யுவகேந்திரா திட்ட உதவி அலுவலர் முனைவர். ஆர்.நமச்சிவாயம் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். தமிழக அரசு வானவில் மன்றங்களின் மூலம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்று ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சென்று வந்த மாணவர்கள் மனோஜ் மற்றும் யோகபிரகாஷ் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நிறைவாக மாவட்ட துணைத் தலைவர் இரா.ராமதிலகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

2வது அமர்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க பிரதிநிதிகள் மாநாடு மாவட்ட தலைவர் ம.வீரமுத்து தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் க.ஜெயராம் வரவேற்றார். இதில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுக்குழு உறுப்பினர் அ.மணவாளன் சமூக மாற்றத்திற்கான அறிவியல் எனும் தலைப்பில் பேசினார். இதில் கடந்த 2 ஆண்டுகளில் நடைபெற்ற அறிவியல் இயக்க வேலைகள் குறித்து மாவட்ட செயலாளர் மு.முத்துக்குமார் அறிக்கை வாசித்தார். பின்னர் புதிய நிர்வாகிகளில், மாவட்டத் தலைவராக மு.முத்துக்குமார், மாவட்ட செய லாளராக ம.வீரமுத்து, மாவட்ட பொருளாளராக த.விமலா ஆகியோரும் துணைத் தலைவர்களாக க.சதாசிவம், இரா. இராமதிலகம், ஆர்.பிச்சை முத்து, ஈ.பவனம்மாள், ஆ. செல்வராசு,பெ.புவியரசு. இணைச் செயலாளர்களாக சி.ஷோபா, க.வடிவேல், மு.சாமியப் பன், நூ.ஜெரினா பேகம்,வீ. சண்முகப்பிரியா, க.ரா. ஓவியா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெ டுக்கப்பட்ட நிர்வாகிகளை மாநில துணைத் தலைவர் எம்.மாணிக்கத்தாய், நிர்வாகி லெ.பிரபாகரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார். இதில்,தமிழக அரசு வானவில் மன்றங்களை அரசு பள்ளிகளில் ஏற்படுத்தி மாணவர்களிடம் அறிவியல் சிந்தனையை மேலோங்க செய்யும் விதத்திலும், அறிவியல் மனப்பான்மை யை மேம்படுத்தும் விதத்திலும் செயல்பட்டுவரும் வானவில் மன்றங்களை அமைத்து கொடுத்து சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு இம்மாநாடு பாராட்டு தெரிவிப்பது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசு நவீன அறிவியல் தொழில் நுட்ப வசதிகளோடு கூடிய கோளரங்கம், அறிவியல் பூங்கா மற்றும் கண்காட்சி கூடம் ஆகியவற்றை அமைத்துதர வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒன்றியங்கள் தோறும் அறிவியல் பூங்காக்களை தமிழக அரசு அமைக்க வேண்டும் . சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக பிளாஸ்டிக் பயன்பாட்டில் இருந்து புதுக்கோட்டையை பாதுகாக்கும் வகையில் காகிதப்பைகளை பயன்படுத்த வலியுறுத்தும் வகையில் மக்களிடம் தீவிர விழிப்புணர்வு பிரசார பணிகளை தொடர்ந்து மேற்கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவாக தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட இணை செயலாளர் சி.ஷோபா நன்றி தெரிவித்தார். மாநாட்டில் மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், வட்டார நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டத்தின்கீழ் அனைத்து அரசு பள்ளிகளிலும் சிறப்புத் தூய்மைப் பணிகள்

ஈரோடு, ஜன.10

ஈரோடு மாவட்டத்தில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி திட்டத்தின்கீழ், உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் சிறப்புத் தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது.



இதுகுறித்து மாவட்ட கலெக்டர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தன் சுத்தம், பள்ளி வளாகத் தூய்மை, பள்ளியின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறுதல், கழிவு மேலாண்மை முறைகளை அறிந்து கொள்ளுதல், மறுசுழற்சி முறைகளின் முக்கியத்துவத்தினை உணர்தல், நெகிழி பயன்பாட்டை குறைத்து இயற்கைக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்துவது குறித்த ஊக்கமூட்டும் நடவடிக்கைகள், பள்ளி காய்கறித் தோட்டம் அமைத்தல் ஆகியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, எங்கள் பள்ளி மிளிரும் பள்ளிருநரழவ் திட்டத்தின் சிறப்பு செயல்பாடாக சிறப்புப் பள்ளி தூய்மைப் பணி செயல்பாடுகள் பள்ளி மேலாண்மைக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம், முன்னாள் மாணவர்கள் மன்றம், தன்னார்வலர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது நடைபெறுகிறது.

இச்சிறப்புத் தூய்மைப் பணிகளை அனைத்து அரசு பள்ளிகளிலும் ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தி அனைத்துத் துறையினரையும் ஒருங்கிணைத்து குழு செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில், எங்கள் பள்ளி மிளிரும் பள்ளிருநரழவ் திட்டத்தின்கீழ், இன்றைய தினம் ரூடவ்ரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் சிறப்புத் தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது என மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் விநியோகம்

செங்கல்பட்டு, ஜன.10

அரசு செய்தி வெளியீடு எண்.27 செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை எண்.05/01/2024 மற்றும் அரசாணை(2டி) எண்.3 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள்.08.01.2024 ன்படி 2024 ஆம் ஆண்டும் பொங்கள் பண்டிகைக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசாக ரொக்க பணம் ரூ.1000/ ஒரு கிலோ பச்சரிசி ஒரு கிலோ சர்க்கரையுடன் முழு கரும்பு வழங்கிட தமிழக அரசு ஆணை பிறபிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பரிசு தொகுப்பு மத்திய மாநில அரசு ஊழியர்கள் வருமான வரி செலுத்துவோர் பொது த்துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதார்ர்கள் பொருளில்ல அட்டைதார்ர்கள் தவிர்த்து ஏனைய குடும்ப அட்டைதார்ர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.



செங்கல்பட்டு மாவட்டத்தில் தகுதியுள்ள குடும்ப அட்டைதார்ர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் விநியோகம் 07.01.2024 முதல் 09.01.2024 வரை பரிசு தொகுப்பு வழங்கப்படும் நாள் மற்றும் நேரம் போன்ற விரங்கள் குறிப்பிட்டு முன்கூட்டியே குடும்ப அட்டைதார்ர்களுக்கு வழங்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வருகிற 10.01.2024 முதல் 14.01.2024 வரை காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும். பொங்கல் பரிசுத் தொகுப்பு ரேசன் கடை விற்பனை முனைய இயந்திரத்தின் பயோமெட்ரிக் முறை மூலம் வழங்கப்படும். பொங்கல் பரிசு வழங்கப் பட்ட விவரம் குடும்ப அட்டைதார்ர்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்ப்ப்படும்

குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் பொங்கல் பரிசு தொகுப்பு பெற்றுக்கொள்ளலாம் அங்கீகரிக்கப்பட்ட நபர் வாயிலாகவோ அல்லது இதர நபர் வாயிலாகவோ பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட மாட்டாது.பொங்கல் பரிசு தொகுப்பு பெறுவதில் ஏதேனும் புகார்கள் இருப்பின் மாவட்ட கட்டுபாட்டு அறை எண் 04427427412, 044 27427414 என்ற எண்ணிற்கு புகார் அளிக்கலாம் மேலும் கீழ் கண்ட அலுவலர்களின் அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

1.மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் 9944725575 2.வட்ட வழங்கல் அலுவலர் செங்கல்பட்டு 8531037755 3.வட்ட வழங்கல் அலுவலர் மதுராந்தகம் 89407 27585 4. வட்ட வழங்கல் அலுவலர் திருக்கழுக்குன்றம் 9790921893 5. வட்ட வழங்கல் அலுவலர் திருப்போரூர் 9944336339 6. வட்ட வழங்கல் அலுவலர் வண்டலூர் 9629749023 7. வட்ட வழங்கல் அலுவலர்செய்யூர் 9003057854 எனவே தகுதியுள்ள குடும்ப அட்டைதார்ர்கள் டோக்கனில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் சம்மந்தப்பட்ட ரேசன் கடைகளுக்குச் சென்று பொங்கல் பரிசுத் தொகுப்னை பெற்றுக்கொள்ளலாம்.

# ஆஞ்சநேயர் ஜெயந்தி விழாவையொட்டி 1.08 லட்சம் வடை தயாரிப்பு பணி துவக்கம்

நாமக்கல், ஜன. 10

நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமிக்கு வரும் 11ம் தேதி, சாத்துவதற்காக கோயில் மண்டபத்தில் 1லட்சத்து 8 வடை தயாரிக்கும் பணி துவங்கியது. வரும், 11ம் தேதி, ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு, நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமிக்கு, ஒரு லட்சத்து 8 வடை மாலை சாற்றுவதையடுத்து, வடை தயாரிக்கும் பணி துவங்கியது.



நாமக்கல் நகரில் பிரசித்தி பெற்ற ஆஞ்சநேயர் சுவாமி கோவில் உள்ளது. இங்கு, ஒரே கல்லினால் உருவான, 18 அடி உயர ஆஞ்சநேயர் சுவாமி, நின்ற நிலையில், சாந்த சொரூபியாக பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். ஆண்டு தோறும், மார்கழி மாதம், அமாவாசை தினத்தில், ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா கோலாகலமாக கொண்டாடப்படும். அதன்படி, இந்த ஆண்டு, வரும், 11ல், ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. விழாவை முன்னிட்டு, அன்று, அதிகாலை, 5:00 மணிக்கு, ஆஞ்சநேயர் சுவாமிக்கு, ஒரு லட்சத்து, 8 வடைமாலை சார்த்தப்பட்டு, சிறப்பு அலங்காரம் நடக்கிறது. அதையடுத்து, காலை, 11:00 மணிக்கு, நல்லெண்ணை, பஞ்சாமிர்தம், சீயக்காய்த்தூள், 1,008 லிட்டர் பால், தயிர், திருமஞ்சனம் உள்ளிட்ட நறுமண பொருட்களால் அபிஷேகம் செய்யப்படும். தொடர்ந்து, தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டு, மகா தீபாராதனை நடைபெறும். ஆஞ்சநேயருக்கு சாற்றுவதற்காக, ஒரு லட்சத்து எட்டு வடை தயாரிக்கும் பணி, கோவில் வளாகத்தில் உள்ள மண்டபத்தில், இன்று துவங்கியது. அதற்காக, ஸ்ரீரங்கத்தை சேர்ந்த ரமேஷ் தலைமையில், 34 பேர் கொண்ட குழுவினர், நாமக்கல் வந்து, வடை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து, ஸ்ரீரங்கத்தை சேர்ந்த ரமேஷ் கூறியதாவது: ஆஞ்சநேயர் ஜெயந்திக்காக, ஒரு லட்சத்து எட்டு வடை தயாரிப்பதற்கு, 2,050 கிலோ உளுத்தம் பருப்பு பயன்படுத்தப்படுகிறது. 600 லிட்டர் நல்லெண்ணெய், 32.200 கிலோ மிளகு, 32.200 கிலோ சீரகம், 125 கிலோ உப்பு ஆகியவை பயன்படுத்தப்படுகிறது. பொருட்களை சுத்தம் செய்து மாவரைத்து வடை தயாரிக்கும் பணி, இரவு, பகல் என, 240 மணி நேரமும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். வரும், 10ம் தேதி , மதியம், ஒரு லட்சத்து எட்டு வடை தயாரிக்கும் பணிகள் முடிவு பெறும்.

அதையடுத்து, கயிற்றில், மாலையாக கோர்க்கப்படும். அப்பணி முடிந்ததும் அன்று இரவு, கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும்.



# தேர் திருவிழாவை தள்ளி வைத்த 'லால் சலாம்'

ரஜினிகாந்த் தனது மகள் ஐஸ்வர்யா இயக்கிய 'லால் சலாம்' படத்தில் நடித்துள்ளார். மொய்தீன் பாய் என்ற கதாபாத்திரத்தில் அவர் நடித்துள்ளார். மேலும், இதில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ், விஷ்ணு விஷால், விக்ராந்த் ஆகியோரும் நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

இந்த படம் கிரிக்கெட் விளையாட்டை மையமாக வைத்து தயாராகி உள்ளது. படத்தின் டிரைலரில் கூட கிரிக்கெட் போட்டி மத மோதலாக உருவெடுப்பதையும், அப்போது ரஜினிகாந்த் அறிமுகமாகி 'விளையாட்டுல மதத்தை கலந்துருக்கீங்க. குழந்தைகள் மனசுல கூட விஷத்தை விதைச்சிருக்கீங்க. தப்பாபோகுது' என்று ஆவேசமாக பேசும் வசனம் கவனம் ஈர்த்தது. படத்தில் ரஜினியின் அதிரடி சண்டை காட்சிகளும் உள்ளன. இப்படம் பொங்கலுக்கு திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 'லால் சலாம்' திரைப்படத்தின் ரிலீஸ் தேதி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அதாவது, இப்படம் பிப்ரவரி 9ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ரசிகர்கள் உற்சாகத்திலும் சற்று குழப்பத்திலும் உள்ளனர்.

# நமை தொட்டவர் நெஞ்சினை கீறிடு வைரலாகும் அருண் விஜய் பட பாடல்



இயக்குனர் ஏ.எல்.விஜய் இயக்கத்தில் தற்போது அருண் விஜய் நடித்துள்ள திரைப்படம் 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1'. இப்படத்தின் கதாநாயகியாக எமி ஜாக்சன் நடிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

எம். ராஜசேகர் மற்றும் எஸ்.சுவாதி தயாரித்துள்ள இப்படத்தை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் லைகா நிறுவனம் வெளியிடவுள்ளது. 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1' திரைப்படம் 12 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியானது.

இந்நிலையில், 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'அச்சமே அச்சமே' பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது. அருண்ராஜா காமராஜ் வரிகள் எழுதி பாடியுள்ள இந்த பாடலை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.

# சுரேஷ் கோபி மகள் திருமணத்தில் பங்கேற்கிறார் பிரதமர்



மலையாள திரையுலக முன்னணி நடிகர்களாக பல தசாப்தங்களாக இருப்பவர்கள் மம்முட்டி மற்றும் மோகன்லால்.

ஆனால், 90களில் அவர்கள் இருவருக்கும் இணையாக பல வெற்றி படங்களில் கதாநாயகனாக நடித்து புகழ் பெற்ற முன்னணி ஹீரோ சுரேஷ் கோபி. ஆக்ஷன் ஹீரோவாக பல படங்களிலும், குணசித்திர வேடங்களில் பல படங்களிலும் நடித்து தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் சுரேஷ் கோபி.

65 வயதாகும் அவர், சில வருடங்களாக நடிப்பதை குறைத்து கொண்டு அரசியலில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

2016ல் ராஜ்ய சபா நியமன எம்.பி.யாக பாராளுமன்றம் சென்றார்.

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் கேரளாவில் தீவிர அரசியலில் ஈடுபட்டு வரும் சுரேஷ் கோபி, பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவாளர்.

சுரேஷ் கோபியின் மகளான பாக்யாவிற்கும் தொழிலதிபர் ஸ்ரேயஸ் மோகன் என்பவருக்கும் கேரளாவின் புகழ் பெற்ற இந்து கோயிலான குருவாயூரில் உள்ள குருவாயூரப்பன் கோவிலில் வரும் 17 அன்று திருமணம் நடைபெற உள்ளது. திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருவனந்தபுரம் க்ரீன்ஃபீல்டு மைதானத்தில் (Greenfield Stadium) ஜனவரி 20 அன்று நடைபெறும். இந்நிலையில், தங்கள் இல்ல திருமண விழாவில் பங்கேற்குமாறு சுரேஷ் கோபி தனது குடும்பத்தினருடன் சென்று, பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பிதழ் வைத்தார். இதையடுத்து, திருமண நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்களை வாழ்த்த பிரதமர் மோடி வருகை தர உள்ளார்.

முன்னதாக மோடி, காலை 08:00 மணியளவில் குருவாயூர் கோவிலில் தரிசனம் செய்ய உள்ளார். பிறகு, திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு கொச்சி செல்கிறார்.

பிரதமரின் வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் திருமணத்தில் பங்கேற்பார் என தெரிகிறது. திருச்சூர் பாராளுமன்ற தொகுதியில் பா.ஜ.க. சார்பில் நடிகர் சுரேஷ் கோபி களமிறக்கப்படலாம் என சில நாட்களாக செய்திகள் உலா வருவது குறிப்பிடத்தக்கது. அஜித் நடித்த "தீனா", சரத்குமார் நடித்த "சமஸ்தானம்", விக்ரம் நடித்த "ஐ" உட்பட பல தமிழ் படங்களிலும் நடித்தவர் சுரேஷ் கோபி.

# ரிலீசுக்கு ரெடியான கேப்டன் மில்லர் தடை விதித்த நீதிமன்றம்



தனுஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய படம் 'கேப்டன் மில்லர்'. அருண் மாதேஸ்வரன் இயக்கி இருக்கும் இந்த படம் ஜனவரி 12ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்தை சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரித்துள்ளது.

இந்த படத்தில் பிரியங்கா அருள் மோகன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன், சுமேஷ் மூர் மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். வரலாற்று பாணியில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு தணிக்கைக் குழு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. இப்படத்தின் டிரைலர் மற்றும் பாடல்கள் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தை சட்டவிரோதமாக இணையதளங்களில் வெளியிடுவதை தடுக்க உத்தரவிடக் கோரி சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தது, சத்யஜோதி பிலிம்ஸ் பட நிறுவனம் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியம் ஆஜராகி படத்தை சட்டவிரோதமாக வெளியிடுவதால், தயாரிப்பாளர், விநியோகஸ்தர்கள், திரையங்கத்தினர் உள்ளிட்ட பலரும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், தகுந்த தடை உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, 'கேப்டன் மில்லர்' படத்தை 1166 இணையதளங்களில் சட்டவிரோதமாக வெளியிட தடைவிதித்து உத்தரவிட்டதுடன், தகுந்த நடவடிக்கைகளை தனியார் மற்றும் அரசு இணையதள சேவை வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளது.



# விஜய் மீது செருப்பு வீசியதை தவிர்த்திருக்கலாம் விஷால் பேட்டி

நடிகரும், தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த் கடந்த 28ஆம் தேதி உடல் நலக்குறைவால் காலமானார். இவரது மறைவு தமிழகம் முழுவதும் உள்ள மக்களை பெரிதும் பாதித்தது. இவரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த லட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். மேலும் அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலர் நேரிலும், சமூக வலைதளத்தின் மூலமாகவும் அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து விஜயகாந்தின் நினைவிடத்திற்கு தொடர்ந்து ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர்கள் விஷால் மற்றும் ஆர்யா இன்று விஜயகாந்த் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்கள். இதையடுத்து நடிகர் விஷால், விஜயகாந்த் வீட்டிற்கு சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்தார். பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த விஷால், "இந்த வீடு எனக்கு புதிதல்ல. நடிகர் சங்கத்தில் பொதுச்செயலாளராக வெற்றி பெற்று இந்த வீட்டிற்கு வரும் போது பிரேமலதா அம்மா சொன்னது விஷயம் இன்னும் காதில் ஒலிக்கிறது.

விஜயகாந்த் நடிகர் சங்கத்தின் பத்திரத்த மீட்டு வரும் பொழுது ஒரு குழந்தை போன்று லாக்கரில் உள்ள உன் நகைகளை எடு பத்திரத்தை வைக்க வேண்டும் என்று சொன்னது காதில் ஒலிக்கிறது. ஒரு நடிகராக மட்டுமல்ல ஒரு மனிதனாக பெயர் வாங்குவது கடினம். விஜயகாந்த் என்ற வார்த்தை அடி வயிற்றில் இருந்து ஒவ்வொருவரும் கூறுவார்கள். அந்த வயிற்றை நிரப்பும் சாமி விஜயகாந்த். எத்தனையோ லட்சம் பேருக்கு அவர் சாப்பாடு போட்டுள்ளார்" என்று பேசினார்.

மேலும், விஜய் மீது செருப்பு வீசியது குறித்த கேள்விக்கு, "கூட்டம் இருக்கும் பொழுது யார் செருப்பை எடுத்து அடித்தார்கள் என்று நாம் யோசிக்க முடியாது. அதையும் தாண்டி ஒரு நடிகர் அவருக்கு பிடித்த நடிகர், கலைப்பயணத்தில் அவரின் முக்கியமான தூணாக இருந்த நடிகரை பார்க்க வந்திருக்கிறார். அதனால் அதை தவிர்த்திருக்கலாம். ஆனால், அவ்வளவு பெரிய கூட்டத்தில் என்ன நடக்குது என்று யாருக்கும் தெரியாது" என்று பேசினார்.

# பிட்ச்சா டா இது.. கேப் டவுன் ஆடுகளத்தை கடிந்த ஐசிசி



இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி கேப்டவுன் நியூலேன்ட்ஸ் மைதானத்தில் ஜனவரி 3ந் தேதி தொடங்கியது. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 23.2 ஓவரில் 55 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. தொடர்ந்து ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 34.5 ஓவரில் 153 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. 98 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சில் களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா அணி 36.5 ஓவரில் 176 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இதையடுத்து, 79 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. 2வது இன்னிங்சில் 12 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 80 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த டெஸ்ட் போட்டி 2 நாட்கள் முழுவதும் முடியும் முன்னரே முடிவடைந்தது.

147 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிக குறைந்த ஓவர்களில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா இடையிலான 2வது டெஸ்ட் முடிந்துள்ளது. இந்தப் போட்டியில் இரு இன்னிங்சிலும் சேர்த்து மொத்தம் 107 ஓவர்களே வீசப்பட்டது. மொத்தமாக 33 விக்கெட்டுகள் வீழ்ந்தது.

இந்த பிட்ச் குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் தென் ஆப்பிரிக்கா இந்தியா மோதிய 2வது டெஸ்ட் போட்டி நடந்த மைதான பிட்ச் திருப்தியற்றது என ஐசிசி நிர்ணயம் செய்துள்ளது. ஐசிசியின் பிட்ச் மற்றும் அவுட் பீல்ட் கண்காணிப்பு செயல்முறைகளின் கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால் கேப்டவுன் பிட்ச் சில டிமெரிட் புள்ளிகளை

# இந்தியாவில் பிசிசிஐ நடத்தும் போட்டிகளுக்கு புதிய ஸ்பான்சர்கள் ஒப்பந்தம்




இந்திய கிரிக்கெட் வாரியம் (பிசிசிஐ), இந்தியாவில் நடத்தும்சர்வதேசமற்றும்உள்நாட்டுபோட்டிகளுக்கான புதிய ஸ்பான்சர்களை இன்று ஒப்பந்தம் செய்து அறிவித்துள்ளது.

அதன்படிநடப்பாண்டுமுதல்2026வரைஇந்தியாவில் நடைபெறும் சர்வதேச மற்றும் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளுக்கு ஸ்பான்சர்களாக ரிலையன்ஸ் குழுமத்தின் கேம்பா (Campa) மற்றும் ஆட்டம்பெர்க் டெக்னாலஜிஸ் (Atomberg Technologies) நிறுவனங்களை பிசிசிஐ ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தம் வரவிருக்கும் இந்தியா ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டி20 தொடரிலிருந்து ஆரம்பமாக உள்ளது. இந்தியா ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதல் டி20 போட்டி 11ந் தேதி தொடங்குகிறது.

# கோல்ஃப் வீரருடனான 27வருட ஒப்பந்தம் குட்பை சொன்ன "நைக்"

"பணக்காரர்களுக்கான விளையாட்டு" என கருதப்படும் கோல்ஃப் விளையாட்டில் சர்வதேச அளவில் புகழ் பெற்றவர், அமெரிக்காவை சேர்ந்த டைகர் உட்ஸ் (48). இவரது இயற்பெயர் எல்ட்ரிக் டான்ட் உட்ஸ் (Eldrick Tont Woods). 1999 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2004 செப்டம்பர் வரை தொடர்ச்சியாக 264 வாரங்களும், மீண்டும் 2005 ஜூன் மாதம் முதல் 2010 அக்டோபர் வரை தொடர்ச்சியாக 281 வாரங்களும், உலகின் நம்பர் 1 கோல்ஃப் வீரர் எனும் முதலிடத்திலேயே திகழ்ந்தவர் உட்ஸ்.

இக்கால கட்டங்களில் உட்ஸ், 13 முக்கிய கோல்ஃப் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வென்றது குறிப்பிடத்தக்கது.

தொழில்முறை கோல்ஃப் விளையாட்டில் தனது 20வது வயதிலேயே பங்கு பெற தொடங்கிய உட்ஸ், அமெரிக்காவை சேர்ந்த பிரபல பன்னாட்டு உயர்ரக காலணிகள் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனமான "நைக்" (Nike) உடன் அதன் பிராண்ட் தூதராக (brand ambassador) 1996ல் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

27 வருடங்களாக தொடர்ந்த "உட்ஸ்நைக்" கூட்டணி தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இது குறித்து தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் உட்ஸ் தெரிவித்திருப்பதாவது:

27 வருடங்களுக்கு முன் உலகின் தலைசிறந்த ஒரு பிராண்டுடன் அதிர்ஷ்டவசமாக இணைந்தேன். அந்த இணைப்பினால், அன்றிலிருந்து இன்று வரை சிறந்த தருணங்களால் என் நினைவுகள் நிரம்புகிறது. நான் அவற்றை கூற தொடங்கினால், அது தொடர்ந்து கொண்டே இருக்கும். இதற்கு காரணமாக இருந்த ஃபில் நைட் (Phil Knight) எனது நன்றிக்குரியவர். நைக் நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் என் நன்றி.

இந்த இணைப்பின் வழியாக பல பிரமிப்பூட்டும் தடகள விளையாட்டு வீரர்களுடன் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. மக்கள், இதுபோல் மீண்டும் ஒரு அத்தியாயம் உருவாகுமா என கேட்பார்கள். நிச்சயமாக மற்றொரு அத்தியாயம் உருவாகும். இவ்வாறு டைகர் உட்ஸ் பதிவிட்டுள்ளார். இந்த பிரிவை குறித்து நைக் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "27 வருடங்களாக, உலகின் ஒப்பற்ற விளையாட்டு வீரர்களில் ஒருவரான டைகருடன் இணையும் அதிர்ஷ்டம் எங்களுக்கு கிடைத்தது. அவர் கோல்ஃப் விளையாட்டை மாற்றியது மட்டுமில்லாமல், அதில் இருந்த பல தடைகற்களை தகர்த்து எறிந்தார். அவர் எதிர்காலம் சிறப்பாக அமைய எங்கள் வாழ்த்துக்கள்" என தெரிவித்துள்ளது. 2016லிருந்தே நைக் நிறுவனம், கோல்ஃப் விளையாட்டிற்கான உபகரணங்கள் தயாரி க்கும் தொழிலிலிருந்து விலகி கொண்டது குறிப்பிடத்தக்கது.

# வெறித்தனமான workout.. ஃபயர் மோடில் ஹார்திக்.. வைரலாகும் வீடியோ



ஒருநாள் உலகக் கோப்பையைத் தொடர்ந்து இந்திய அணி, ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் முதலில் விளையாடியது. இதில், சூர்யகுமார் தலைமையிலான இந்திய அணி 41 என்று டி20 தொடரைகைப்பற்றியது. இதையடுத்து தென் ஆப்பிரிக்கா சென்ற இந்திய இந்திய அணி 3 டி20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள்கொண்ட தொடரில்பங்கேற்றது. இதில் டி20 தொடரை 11 என்று சமன் செய்தது. ஒருநாள் தொடரை 21 என்று கைப்பற்றியது. டெஸ்ட் தொடரை 11 என்று சமன் செய்து வரலாறு படைத்தது.

தென் ஆப்பிரிக்கா தொடரைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி விளையாட உள்ளது. இந்த தொடரில் ஹார்திக் பாண்டியா இடம் பெறுவார் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால், காயத்திலிருந்து முழுமையாக மீளாததால் அவர் இடம் பெறவில்லை. இதனால் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டி20 தொடரில் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் இடம் பெற்றனர். ரோகித் சர்மா கேப்டனாகவும் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஹார்திக் பாண்டியா தீவிரமாக ஒர்க் அவுட் செய்யும் வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் முன்னோக்கி செல்ல ஒரே ஒரு வழி மட்டுமே என தலைப்பிட்டிருந்தார்.

இந்த வீடியோவுக்கு நெட்டிசன்கள், இப்படியே போனால் ஐபிஎல் தொடரிலும் உலகக் கோப்பையிலும் கேப்டன் பதவி கிடைக்காமல் போய்விடும் என பயந்து இந்த வீடியோவை வெளியீட்டுள்ளதாகவும் இதனால் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஹார்திக் பாண்டியா ஜிம்மில் தீவிரமாக ஒர்க் அவுட் செய்து வருகிறார் என்றும் ரசிகர்கள் கூறி வருகின்றனர்.



அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை

விளக்கம்:

பல்லக்கை சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63811.1. Editor: KANI RAJA V.